ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2302/24 - 2022 ඔක්තෝබර් මස 20 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.10.20
2302/24 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 20 ஆந் திகதி வியாழக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்

**கப்பல் முகவர்கள், சரக்கு அனுப்புவர்கள், சரக்குக் கப்பல் அல்லாத பொது இயக்குபவர்கள் மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர்களுக்கு அனுமதிப் பத்திரம் வழங்குதல்**

*1972 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) கப்பல் முகவர்கள், சரக்கு அனுப்புபவர்கள், சரக்குக் கப்பல் அல்லாத பொது இயக்குபவர்கள் மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர்களுக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்கும் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை விமான சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட கட்டளைகள்.*

**நிமல் சிறிபால த சில்வா,**
துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும்
விமானப் போக்குவரத்து அமைச்சர்.

கொழும்பு,
2022, ஒற்றோபர் 18.

**கட்டளைகள்**

2017.10.17 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் ஊடாக வெளியிடப்பட்ட கப்பல் முகவர்கள், சரக்கு அனுப்புபவர்கள், கப்பல்களை இயக்குபவர்கள் அல்லாத மற்றும் கொள்கலன் வண்டி செயற்படுத்துநர்களின் (கட்டண கட்டமைப்பு) கட்டளைகள் கீழ் வருமாறு 2022.11.01 ஆந் திகதி முதல் அமுல்படுத்துமாறு திருத்தப்படுகிறது.

1. கட்டளை 03 இல் "அதே" என்ற சொல்லைத் தொடர்ந்து "இப் பிரிவின் 5 ஆவது கட்டளையின் ஒழுங்குவிதிகளுக்கு உட்பட்டு" என்ற சொற்களை உள்ளடக்குதல்;

2. 05 ஆவது கட்டளையின் துணை கட்டளையை இரத்துச்செய்து கீழ் குறிப்பிட்டுள்ள விடயங்களை பிரதியீடு செய்தல்.

எனினும், மேலும் சேவை வழங்குநர்களினால் உப அட்டவணையின் 11 ஆம் பிரிவில் குறிப்பாக குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் இறுதி பொறுப்பேற்பாளரிடமிருந்து கிரய மீட்புக் கட்டணத்தை அறவிட வேண்டியது இந்தக் கட்டளைகளினால், 12ஆம் பிரிவின் கட்டளைகளுக்கு ஏற்ப (ஆ) மற்றும் (இ) ஆகிய விளக்கப்படுத்தல்களின் கீழ் ஆரம்பம் முதல் பயண முடிவிடம் வரை சரக்குப் போக்குவரத்து தொடர்பாகவாகும்.

வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரதாரரான சேவை வழங்குநரொருவர் இறக்குமதியாளரிடம் விநியோகிக்கும் தருவித்தற் கட்டணமொன்று அறவிட வேண்டியதோடு அது இக்கட்டளையின் 1 ஆவது உப அட்டவணையில் 1 ஆவது பகுதியில் காட்டப்பட்டுள்ளவாறு இலங்கை ரூபாய்களில் செலுத்த வேண்டும்.

மேலும், தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளியியல் திணைக்களம் வெளியிடப்படுகின்ற பணவீக்கத்தின் அடிப்படையில் ஒவ்வொரு 6 மாதங்களுக்கு ஒரு முறை உரிய உப அட்டவணை 1 இன் கட்டணங்களை திருத்தம் செய்ய முடியும்.

3. 06 ஆவது கட்டளை இத்தால் அகற்றப்படுகிறது.

4. கீழ் குறிப்பிட்ட வரைவிலக்கணத்தில் ''ஆரம்பம் முதல் பயண முடிவிடம் வரை'' என்ற கூற்றின் விளக்கமளித்ததன் பின் உடனடியாக உள்ளடக்குவதன் மூலம் கட்டணத்திற்கு உரிய வகையில் உள்ளடக்கப்படுவது

(அ) கழுவும் கட்டணம்

(ஆ) நிரப்பியவற்றை அகற்றும் கட்டணம்

(இ) போக்குவரத்துச் செலவீனம்

5. கீழ்க் குறிப்பிட்ட பிரகாரம் 12 ஆவது ஒழுங்குவிதிகளைத் தொடர்ந்து அட்டவணை 1ஐ உட்புகுத்துவதன் மூலம்

**1 அட்டவணை**

**பகுதி I**

கப்பலேற்றப்பட்ட ஏற்றுமதி செய்தல் தொடர்பாக உச்ச விநியோக கட்டளை கட்டணம்

FCL ஏற்றுமதிகள் தொடர்பாக

இறுதி சரக்கு போக்குவரத்து செய்பவர்/இறக்குமதி செய்பவரினால் செலுத்த வேண்டிய உச்ச DO கட்டணம் (சரக்கு போக்குவரத்து செய்கின்ற கட்டணங்கள்/ஒருங்கிணைக்கப்பட்ட கட்டணங்கள் தவிர) ரூ. 18,000/- ஆகும்.
அதன்படி,

- கப்பல் நிறுவனங்களில் இருந்து சரக்கு அனுப்புபவர்களுக்கு - அதிகபட்ச லைனர் DO செய்ய கட்டணம் ரூ. 14,800/-
- கப்பல் நிறுவனங்களில் இருந்து சரக்கு ஒருங்கிணைப்புச் செய்யும் நிறுவனம் வரை - அதிகபட்ச லைனர் DO செய்ய கட்டணம் ரூ. 14,800/-

LCL கப்பல் ஏற்றிய சரக்கு இறக்குமதிகளுக்கு
இறுதி இருப்புரிமையாளர்/இறக்குமதியாளரினால் செலுத்த வேண்டிய அதிகபட்ச DO கட்டணம் ரூ. 20,500/-
அதன்படி,

- ஒருங்கிணைப்பாளர்கள் முதல் சரக்கு அனுப்புபவர்கள் வரை - அதிகபட்ச DO கட்டணம் ரூ. 16,500/- இருக்க வேண்டும்.

**பகுதி II**

**செலவு மீட்புக் கட்டணம்**

இந்த கட்டளை உள்ளடக்கப்பட்ட, 12 ஆவது கட்டளையில் ஆரம்பம் முதல் பயணமுடிவிடம் வரையான விளக்கத்திற்கு உட்பட்டு, எந்தவொரு பயணமுடிவிடம் வரை போக்குவரத்துச் செய்வதற்கு ஏற்ற வகையில் சேவைவழங்குநரினால் கிரய மீட்புக் கட்டணமாக 1CB தொடர்பாக உச்ச அளவில் ஐ. அ. டொ. 8க்கு சமமான தொகையை இறுதி இருப்பு உரிமையாளர்களிடமிருந்து அறவிடுதல் வேண்டும்.

EOG 10 - 0170

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.